**சுருக்கம்**

மோட்டார் வாகனம் – துறை வாகனங்கள் – அரசு துறை வாகனங்களில் பயன்படுத்தப்பட்டு மீண்டும் பயன்படுத்த இயலாத டயர் மற்றும் டியூபுகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைவிலையில் வழங்கப்பட்டு வரும் விலை விகிதங்களை மாற்றியமைத்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உள்(போக்குவரத்து–4)துறை**

அரசாணை (1 டி) எண். 168 நாள் 7.2.2007

**படிக்கப்பட்டவை**

1. அரசு ஆணை (நிலை) எண். 1368, உள் துறை, நாள் 27.5.86.
2. அரசு ஆணை (வா) எண். 1347, உள் துறை, நாள் 27.6.02.

**மீண்டும் படிக்க**

3. இயக்குநர், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை சென்னை, நே.மு.கடித எண் எ3/0024/ 05, நாள் 8/11/06

---

**ஆணை:**

அரசுத் துறை வாகனங்களில் பயன்படுத்தப்பட்டு கழிவு செய்யப்பட்டு மீண்டும் பயன்படுத்த இயலாத உருளைகள் மற்றும் குழாய்களை தோல்பொருள் உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அவர்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்ய கீழ்க்கண்ட விலை நிர்ணயம் செய்யப்பட்டு அரசாணை (வாலாயம்) எண் 1347, உள்(போவ.4) துறை நாள் 27.6.2002–இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) கனரக ஊர்திகளின் உருளைகள் | – | ரூ.250/– (ஒன்றுக்கு) |
| 2) கனரக ஊர்திகளின் குழாய்கள் | – | ரூ. 50/– (ஒன்றுக்கு) |
| 3) இலகுரக ஊர்திகளின் உருளைகள் | – | ரூ.100/– (ஒன்றுக்கு) |
| 4) இலகுரக ஊர்திகளின் குழாய்கள் | – | ரூ. 20/– (ஒன்றுக்கு) |

2. தற்போது வழங்கும் சலுகை விலை 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் ஆனதாகும். எனவே நான்கு ஆண்டுகள் கடந்து விட்டதால் அரசு துறை வாகனங்களில் மீண்டும் புதுப்பிக்க மற்றும் உபயோகிக்க முடியாத டயர்கள் மற்றும் டியூபுகள் விலையை மாற்றியமைத்தல் குறித்து கருத்துரு அனுப்புமாறு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் தற்போது மார்க்கட் விலைப்படி டயர் மற்றும் டியூபுகள் 2002 லிருந்து 2006க்குள் சுமார் 20% விலை ஏற்றம் அடைந்துள்ளதால், ஒப்பளிக்கப்பட்ட அருந்ததியர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்கப்படும் அரசு துறை வாகனங்களில் மீண்டும் பயன்படுத்த இயலாத டயர்கள் மற்றும்

டியூபுகளின் சலுகை விலையை கீழ்கண்டவாறு மாற்றி நிர்ணயம் செய்யலாம் என்று பரிந்துரைத்துள்ளார் :-

1) கனரக ஊர்திகளின் உருளைகள் – ரூ.300/– (ஒன்றுக்கு)
2) கனரக ஊர்திகளின் குழாய்கள் – ரூ. 60/– (ஒன்றுக்கு)
3) இலகுரக ஊர்திகளின் உருளைகள் – ரூ.120/– (ஒன்றுக்கு)
4) இலகுரக ஊர்திகளின் குழாய்கள் – ரூ. 24/– (ஒன்றுக்கு)



2. மேற்காணும் சூழ்நிலையில் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரின் கருத்துருவில் உள்ள நியாயத் தன்மையினைக் கருத்திற் கொண்டு அரசு துறை வாகனங்களில் மீண்டும் பயன்படுத்த இயலாத டயர்கள் மற்றும் டியூபுகளின் சலுகை விலையை மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரின் பரிந்துரையின்படி கீழ்கண்ட சலுகை விலையில் விற்பனை செய்ய அரசு ஆணையிடுகிறது :-

1) கனரக ஊர்திகளின் உருளைகள் –(ஒன்று) ரூ.300/– (ரூபாய் முன்னூறு மட்டும்)
2) கனரக ஊர்திகளின் குழாய்கள் –(ஒன்று) ரூ. 60/– (ரூபாய் அறுபது மட்டும்)
3) இலகுரக ஊர்திகளின் உருளைகள் –(ஒன்று) ரூ.120/– (ரூபாய் நூற்று இருபது மட்டும்)
4) இலகுரக ஊர்திகளின் குழாய்கள் –(ஒன்று) ரூ. 24/– (ரூபாய் இருபத்தி நான்கு மட்டும்)

4. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன்அ.சா.எண். 6537/H1/07 நாள் 2/2/2007 பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.மாலதி
அரசு செயலர்

பெறுநர்
இயக்குநர்,
மோட்டார் வாகனம் பராமரிப்புத் துறை ,
அசோக் நகர், சென்னை–83.
போக்குவரத்து ஆணையர், சென்னை–5.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்.
கணக்கு அலுவலர், சென்னை, மதுரை.
துணை பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை.4.
தலைமை செயல் அலுவலர், கதர் கிராமிய வாரியம், சென்னை.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்,சென்னை–9.
இயக்குநர், காவல்துறை, சென்னை–4.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்